
Transport for NSW

# சாலைப் பாதுகாப்பு




## பள்ளிப் பேருந்துகள் அருகே பாதுகாப்பாக ஓட்டுதல்

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்கிறார்கள் அல்லது இறக்கிவிடுகிறார்கள் என்றும், குழந்தைகள் சாலையைக் கடக்கிறார்கள் அல்லது கடக்க எத்தனிக்கிறார்கள் என்றும் ஓட்டுநர்களை எச்சரிக்க பேருந்துகள் பலகைகள் மற்றும் ஒளிரும் விளக்குகளைப் பயன்படுத்துகின்றன.

சட்டப்படி, விளக்குகள் ஒளிரும் போது, அதே திசையில் மணிக்கு 40km வேகத்தின் மேல் பேருந்தைக் கடந்து செல்லக்கூடாது. பேருந்து நின்று கொண்டிருந்தாலும் நகரும் போதும் இது பொருந்தும்.

பெரிய மற்றும் கனரக வாகனங்கள் என்பதால் பஸ்களை துரிதமாக நிறுத்த முடியாது. மற்ற வாகனங்களை விட அவை மிகப் பெரிய குருட்டுப் புள்ளிகளைக் (blind spots) கொண்டிருக்கலாம். எனவே, நினைவில் கொள்ளுங்கள்:

- குறைந்த வேக வரம்பு பொருந்தாத பட்சத்தில், பேருந்து விளக்குகள் ஒளிரும் போது வேகத்தை மணிக்கு 40km ஆகக் குறைக்கவும்
- குழந்தைகள் கடக்கிறார்களா அல்லது சாலையைக் கடக்கப் போகிறார்களா என்பதைக் கவனியுங்கள்
- பேருந்து நிறுத்தம் அல்லது பேருந்து வலையத்தில் அல்லது அதன் அருகில் நிறுத்த வேண்டாம்
- பேருந்துகளுக்கு வழி கொடுங்கள்

### முறைசாராப் பள்ளி பேருந்து நிறுத்தங்கள்

கிராமப்புற மற்றும் பிராந்திய பகுதிகளில் பல முறைசாராப் பள்ளி பேருந்து நிறுத்தங்கள் உள்ளன, அவை அடையாளங்கள் அல்லது கட்டமைப்புகள் இல்லாத பேருந்து தங்குமிடங்கள் போன்றவை. அவை ஒரு ஓட்டுப்பாதையின் முடிவில் அல்லது சாலையின் ஓரத்தில் இருக்கலாம், இது குழந்தைகளைப் பார்ப்பதைக் கடினமாக்கலாம்.

பேருந்து விளக்குகள் ஒளிரும் போது மணிக்கு 40km ஆக வேகத்தைக் குறைக்கவும், சமிக்ஞைகளைப் பின்தொடரவும், சாலையைக் கடக்கும் குழந்தைகளைக் கவனிக்கவும். ஒரு நிலையான பேருந்து குழந்தைகள் தெரிவதைத் தடுக்கலாம், எனவே ஓட்டுநர்கள் மெதுவாகச் செல்ல வேண்டும்.

**குழந்தைகள் உங்களிடமிருந்து பாதுகாப்பான சாலைப் பயணப் பழக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், மேலும் அவர்கள் தனியாகப் பயணம் செய்யும் அளவுக்கு வளரும்போது அவற்றைக் கடைப்பிடிப்பார்கள்.**

சாலைச் சூழலில் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு **safetytown.com.au** இல் உள்ள குடும்பங்கள் (families) என்ற பகுதியைப் பார்வையிடவும்

தனித்துவக் குறியீடு 45095358 ஜூன் 2024 © NSW க்கான போக்குவரத்து

NSW GOVERNMENT

NSW சாலைகளில் பல உயிர்கள் பலியாகியுள்ளன.
**நமது இலக்கு பூச்சியம் ஆகும்.**

TOWARDS ZERO